பொதுசன
யாழ்ப்பாணம்
கிளைநூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 11 | 27-08-94 | சனிக்கிழமை | ஓசை 190

## கப்டன் அங்கயற்கண்ணி நினைவாக வீரவணக்க கூட்டங்கள்

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் சென்று சிறிலங்காவின் மிதக்கும் கோட்டையாம் கட்டளையிடும் தாய்க்கப்பலையும் அதற்குத் துணை நின்ற டோறா விசைப்படகினையும் தகர்த்தழித்த போது வீரச்சாவடைந்த முதல் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி நினைவு வெற்றி வீரவணக்க கூட்ட நிகழ்வுகள் இன்று இரவு 7-00 மணிக்கு நான்கு இடங்களில் நடைபெறவுள்ளன. வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் முன்றலிலும் வடமராட்சியில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத் (6ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையற்ற பேச்சிற்கு புலிகள் தயார்;

# போர் நிறுத்தம் செய்வதற்கும் இணக்கம்

## பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஈழத்தமிழர்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவர்களுடன் பேச்சுக்களை நடத்த சந்திரிகா அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இதனை எமது இயக்கமும் மனப்பூர்வமாக வரவேற்கிறது. புதிய அரசுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் போர்நிறுத்தம் செய்யவும் நாம் தயாராக இருக்கின்றோம்." என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார். இம்மாநாட்டில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும், போரை ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டும், சமாதானப் பேச்சுக்கள் மூலம் இணக்கம்காண வேண்டும் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க விடுத்துவரும் அறிக்கைகளை, விடுதலைப் புலிகள் இயக்கம் வரவேற்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஈழத்தமிழரின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவர்களுடன் பேச்சுக்களை நடத்த சந்திரிகா அரசு விருப்பம் தெரிவித்திருக்கிறது இதனை எமது இயக்கமும் மனப்பூர்வமாக வரவேற்கிறது.

### நிபந்தனையின்றி பேச்சு நடத்த தயார்

புதிய அரசுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்த நாம் தயாராக இருக்கின்றோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவை நீண்டகாலமாக நாம் திறந்தே வைத்துள்ளோம்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமான காலத்திலிருந்தே நாம் எமது சமாதானக் கதவுகளை திறந்து வைத்திருக்கிறோம் எனவும் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தைகளுக்கு தயாராகஇருக்கிறோம் எனவும் பல தடவைகள் அறிக்கைகள் விடுத்துள்ளோம். எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்கள்கூட எமதுநிலைப்பாட்டை வலியுறுத்தி, சமாதானக் கதவுகளைத் திறந்திருப்பதாக அறிக்கைகளும் விடுத்துள்ளார்

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை பேச்சுக்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில்பரஸ்பரநம்பிக் (5 ஆம் பக்கம் பார்க்க)

# உத்தியோக பூர்வமாக அரசு இதுவரை தொடர்புகொள்ளவில்லை

கடந்தகால இராணுவ நடவடிக்கை

## பலாபலன்களை ஆராய்ந்த பின்பே அரசியல் தீர்விற்குத் தயாரானோம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் ஏற்பட்ட இராணுவ ரீதியான பின்னடைவுகளையும், அதே காலத்தில் இராணுவத் தரப்பின் முன்னேற்றங்களையும் ஒப்பு நோக்கியே வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியற் தீர்வு காணும் முயற்சிகளில் புதிய அரசு இறங்கியுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற சிரேஷ்ட அதிகாரிகளுடனான சந்திப்பொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசியற் தீர்வுக்கான அரசின் முயற்சிகளுக்கு முப்படைத் தளபதிகளினதும், பொலிஸ் மா அதிபரினதும் ஒத்துழைப்பு வேண்டுமனவும் பரிபூரணமான ஒத்துழைப்பை அவர்கள் வழங்குவார்கள் என்பதில் நம்பிக்கையுண்டு எனவும் அப்போது அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மத வைபவங்களில் கலந்துகொள்ளும் சராசரி அரசியல் வாதியாக இப்பதவிக்கு நான் வரவில்லை, பாதுகாப்புப்படைகளில் உள்ள துன்பங்கள் துயரங்களில் அனுபவம் எனக்குண்டு. இந்த வைபவத்தில் கலந்து கொள்ளும் முப்படைகளினதும், பொலிஸ் படையினதும் சிரேஷ்ட அதிகாரிகளை ஏற்கனவே அறிந்துள்ளவன், எனவே, அமைச்சின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய படை நடவடிக்கை நடத்த நாம்விரும்பவில்லை

### பிரதி பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணும்முகமாக, விடுதலைப் புலிகளும் நல்ல சமிக்கையைக் காட்டுவதாக பத்திரிகைகள் மூலம் அறிய முடிகிறது. இந் நிலையில் வடக்கு - கிழக்கில் பாரிய யுத்தம் எதையும் நடத்தி அதனைக் குழப்ப நாம் விரும்பவில்லை என சிறிலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வைத்து ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

களுக்கு நாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை பேச்சுக்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில்பரஸ்பரநம்பிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

...ளுக்கு முப்படைத் தளபதிகளி... னதும், பொலிஸ் மா அதிபரினதும் ஒத்துழைப்பு வேண்டுமனவும் பரிபூரணமான ஒத்துழைப்பை அவர்கள் வழங்கு

பத்திரிகைகள் மூலம் அறிய முடிகிறது. இந் நிலையில் வடக்கு - கிழக்கில் பாரிய யுத்தம் எதையும் நடத்தி அத

நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வைத்து ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் இதுபற்றி விபரிக்கையில், எமது பிரதமர் சந்திரிகா இனப்பிரச்சினைக்கு சுமுக தீர்வு காணும் முயற்சியில் தீவிரம்காட்டிவருகிறார். இதன் முதல்கட்டமாக இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டிருந்தார்.

அவருடைய இக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் ஏற்றிருப்பதாகவும் பத்திரிகைகளில் அவர்கள் இதனை ஏற்றுக் கொள்வது போ[illegible]ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உத்தியோக பூர்வமாக அரசு இதுவரை தொடர்புகொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

இதுவரை அரசு உத்தியோகபூர்வமான தொடர்பு எதுவும் விடுதலைப் புலிகளோடு கொள்ளவில்லை. பத்திரிகையாளர் மகாநாடு மூலமே அறிக்கை விட்டு வருகிறார்கள் என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமான முறையில் தொடர்பு கொண்டால், உத்தியோகபூர்வமான முறையில் நாங்களும் தொடர்பு கொள்வோம். பத்திரிகையாளர் மாநாடு மூலமே இப்போது தொடர்பு கொள்ளப்படுகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக நாங்கள் பேச்சுவார்த்தைக்குஅழைப்புவிடுகின்றோம் அரசு தரப்பில் எவ்வித பதிலும் இல்லாது பேசாது இருக்கிறது.

இப்போது புதிய அரசாங்கம் வந்தாலும் உத்தியோக பூர்வரீதியில் அவர்கள் தொடர்பு கொள்ளலாம், பிரதிநிதிகளையும் அனுப்பலாம், நாங்

(6-ம் பக்கம் பார்க்க)

# மத்தியஸ்தம் இன்றி நேரடியாக பேச்சு நடத்தவே விரும்புகிறோம்

இன்றைய அரசியல் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டினை விளக்கும் முகமாக நேற்று யாழ்- நகரில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றினை நடாத்தினர்-

இம் மகாநாட்டில் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும் புலிகளின் நிலைப்பாடு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்-

பேச்சுவார்த்தைகள் நேரடியாக நடப்பதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். இனி, மத்தியஸ்தர்கள் தேவையில்லை.

பேச்சுவார்த்தைகளில் மூன்றாம்நிலை மத்தியஸ்தம் ஒன்று தேவைப்படுமா எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். காலம் காலமாக, எத்தனையோ பேர் வந்து கதைத்துவிட்டுப் போகிறார்கள். நாங்கள் அவர்களிடம், மத்தியஸ்தர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாது எனக் கூறியிருக்கிறோம்.

இரண்டு தரப்புக்கும் மத்தியில், ஒரு தொடர்பை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைப்பதில் வேண்டுமானால் இவர்கள் உதவலாம். அரசும், புலிகளும் பேச்சுவார்த்தையை விரும்பும் பட்சத்தில் இது தேவையில்லை.

மக்கள் மத்தியில், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க தூதுக்குழுக்கள் வரப்போவதாக வதந்திகள் எழுந்துள்ளன. இவற்றில் எதுவித உண்மையுமில்லை.

அப்படியான தூதுக்குழுக்கள் எதுவும் வருமானால் நாங்கள் மக்களுக்கு அறிவிப்போம் என அவர் தெரிவித்தார்.

# பேச்சிற்கு நிபந்தனை கூடாது நாமும் நிபந்தனை போடோம்

வடக்கு-கிழக்கை இணைத்தால்தான் பேசுவோம் என்பது போன்றவரையறைகளை பேச்சுக்கள்ஆரம்பிக்க முன்பே போட நாம் விரும்பவில்லை.

அதேபோல், தமிழீழத்தை கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை என அவர்கள் நின்றாலோ பேச்சுவார்த்தை நடக்காது. நிலைப்பாடுகளை நேரடியாக பேசத் தயாராக இருக்கிறோம்.

தென்னிலங்கையில், பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புக் கிளம்பும் என நாம் எண்ணவில்லை. ஏனெனில், பேச்சுவார்த்தை புலிகளுடன் நடத்துவோம் என்ற கோரிக்கையை முன்வைத்துத்தான் புதிய அரசு பதவிக்கே வந்தது. ஆகவே பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புக் கிளம்பாது என்று கருதுகின்றோம் எனவும் தெரிவித்தார்.

5ம பக்கப்பார்க்க

# ஓமந்தைப்பகுதியில் பலத்த விமானக் குண்டு வீச்சு

## இரு பொதுமக்கள் படுகாயம்

(வவுனியா)

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள்நேற்றுமுன் தினம் ஓமந்தைப்பகுதியில் நடாத்திய தாக்குதலில் இரு பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

மாலை 6.00 மணியளவில் இப் பகுதிக்கு விரைந்து வந்த மூன்று குண்டுவீச்சு விமானங்கள் மாறி மாறி தாக்குதலை நடத்தின இவ் உக்கிர தாக்குதலின் போதே இரு பொது மக்கள் படுகாயமடைய நேரிட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பூநகரிப்பகுதி மோதலில் 4 போராளிகள் வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் கடந்த 23-ம்திகதி விடுதலைப்புலிகள் போராளிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட திடீர் மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த

★ மேஜர் சேரன் (ஐயாத்தம்பி குமரேந்திரன், எழுதுமட்டுவாள் வடக்கு)

★ கப்டன் குணசீலன் /அன்பரசன் (மயில்வாகனம் சற்குணராசா மட்டக்களப்பு)

★ கப்டன் ஜெயக்காந்தன்/ ஜீவகுமார் (கோபாலபிள்ளை சுதாகரன், அம்பாறை)

★ லெப். புதியவன்/ ரமேஷ் (கந்தசாமி முருகதாஸ் மீசாலை தெற்கு, மீசாலை)

ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

---

# படகுச்சேவை இல்லை

வழமையாக நடைபெறும் கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று நடைபெற மாட்டாது என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்-

---

# நரசிம்மராவின் தூதுவர் சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவின் சிறப்பு தூதுவராக திரு. ஏ. என். வர்மா நேற்று கொழும்பு வந்து பிரதமர் திருமதி சந்திரிகாகுமாரணதுங்காவுடன் பேச்சு நடத்தியுள்ளார். நரசிம்மராவின் விசேட கடிதம் ஒன்றையும் அவர் திருமதி சந்திரிகாவிடம் ஒப்படைத்தார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லமான அலரி மாளிகையில் நேற்று இப் பேச்சுக்கள் இடம்பெற்றன சிறப்புத் தூதுவர் வர்மாவுடன் இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் ராஜிவ் பாட்டியா, இலங்கையிலுள்ள

(6ஆம் பக்கம் பார்க்க)

# செப்டெம்பர் -4 உடன் அவசரகாலம் நீக்கம்

(கொழும்பு)

தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்ட விதிகள் அடுத்த மாதம் நான்காம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என தெரிவிக்கப்படுகிறது சந்திரிகா அரசாங்கம் இதனை நீடிக்க விரும்பவில்லை என புதிய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பில் உதவி புரிந்த கலாநிதி ஜெயதேவா உயங்கொட தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெறாத பகுதிகளில் அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நீடிப்பது எந்த வகையிலும் பிரயோசனமற்றது. முன்னைய அரசாங்கம் அவசரகால சட்டம் மூலம் தனது அரசியல் பலத்தைக் கட்டிக் காத்தது என அவர் மேலும் கூறினார்

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படாத கைதிகள் தானாகவே விடுவிக்கப்படுவர் என சொல்வதற்கில்லை. ஆனால் இவர்கள் தொடர்பாக விரைவில் முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்படும் என்றார் அவர்.

---

# படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன்தேர்முட்டி தகரங்களை திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த அ. இந்திரகாந்தன் (வயது 27) என்பவரது தலையின் மீது கப்பி அறுந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்தார்.

தனியார் நிறுவனமொன்று பொறுப்பேற்று நடாத்தும் திருத்தவேலையில் ஈடுபட்டிருந்த போது இவ் விபத்து நிகழ்ந்தது. (சி)

# வரி விளம்பரம்

## வெளிவந்து விட்டது!

ஆண்டு11ற்கானசைவநெறி துரித மீட்டல் வினாவிடை வெளிவந்து விட்டது ஆக்கம்: க. சந்திரசேகரம் ஏக விநியோகஸ்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணியம் பொத்தகசாலை 235, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம் (9176)

## வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

PROF. T. சத்தியதாஸன்கணிப்பில், ஏக வீநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சிவம் நீதிக் கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம், தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)

## நேர்முகப் பரீட்சை

தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன், ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறிக்கு பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை 3-9-94 காலை 9 மணிக்கு வதிரியில் உள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் நடைபெறும் பயிலுனர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புப்படி ரூபா 450/- வழங்கப்படும் -செயலாளர் (9219)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

அழகான 2½மாதம் நிரம்பிய பொமனெரியன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. புதிய நம் 50, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (9218)

## ஆண்டு34 வினாத்தாள்

ஆண்டு 3, ஆண்டு 4 ற்கு மாதந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்கள் 28.08.94 ஞாயிறு வெளியிடப்படும் தேவையானோர் தொடர்பு கொள்ளவும் மாதிரி நாளாந்த வாராந்த (weekq end Classes) வகுப்புகள் நடைபெறுகின்றன புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (9202)

500 ...

---

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

அமரர் பேராசிரியர்

அழகையா துரைராசா அவர்கள்

நினைவஞ்சலி கூட்டமும்

## 6-வது வருடாந்த பொதுக் கூட்டமும்

இடம்: பழைய கல்லூரி மாடிக் கட்டிடம்
காலம்: 1994-08-28 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி
தலைவர்: கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள்

### நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் ஞாபகார்த்த பெயர் சூட்டலும் அன்னாரின் உருவப் படம் திரை நீக்கம் செய்தலும்
3. நினைவஞ்சலி உரை

இதனைத் தொடர்ந்து பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
(8215)

---

## முக்கிய அறிவித்தல்

வலி - கிழக்கு வர்த்தகர் சங்கம்
(கோப்பாய் வட்ட பிரிவு)

வருடாந்த பொதுக்கூட்டம்

இடம்:- நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

கடந்த 10-07-1994-ந் திகதி நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட மேற்படி கூட்டம் வரும் 28/08/1994 ந் திகதி (நாளை) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3-30மணிக்கு நடைபெறும். அனைத்து வணிகர்களும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. பரராசசிங்கம்
தலைவர்.

அ. நாகேஸ்வரன்
செயலாளர்.

(9200)

---

## பொது அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகர சபை

### வியாபார அனுமதிப்பத்திரம் - 1994

(மாநகரசபை கட்டளைச்சட்டம் அத் 252, பிரிவு 247 ஏ.பி)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் பல, மாநகரசபையின் அனுமதியின்றி ஆரம்பிக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது 1994-ல் புதிதாக ஆரம்பித்த வியாபார நிலையங்களும், இதுவரை வியாபார உத்தரவு பெறாத வியா...

---

யாழ் வணிகர் கழகம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

காங்கேசன்துறை துறைமுகத்தில் சிறிலங்கா கடற்படைக்கப்பல்களை வெற்றிகரமாக தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் நினைவு எழுச்சி நாளை ஒட்டி யாழ் நகர் சகல வணிகர் நிலையங்களும் 27-08-94 சனிக்கிழமை முழுமையாக மூடப்பட்டிருக்கும்.

அன்றையதினம் மாலை 4 00 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அனைத்து வணிகப்பெருமக்களும், வணிக ஊழியர்களும், பொதுமக்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச்செயலாளர்
யாழ் வணிகர் கழகம்

(சி-10185)

---

## 45-ம் நாள் நினைவு நாள்



## வீரவேங்கை கர்ணழகன்

விஜயகுமார் (துரை) - ரவிச்சந்திரன் (சந்திரன்)

மலர்வு:
15-09-1976

வீரச்சாவு:
14-07-1994

பெற்றோரின் பெருந்தவமே
சோதரரின் உயிர்த்துடிப்பே
சிந்தையில் நிழலாடும் நினைவுகளெல்லாம்
சந்திரா! உன் அன்பை கோடி முறை சொல்லும்
தாயவள் மீது அன்பு கொண்டது போல்

---

## சபாநாயகர் தெரிவில் காமினிக்கு திருப்தி

(கொழும்பு)

புதிய சபாநாயகரின் தெரிவு குறித்து தாம் திருப்தியடைவதாக, எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கே.பி இரத்னாயக்க அனுபவமுள்ள சிரேஷ்ட அரசியல் வாதி எனவும் அவர் கூறினார்.

---

## நினைவு கூருகின்றோம்...

### 27. 08. 1994 ..

1990 ம் ஆண்டு இதே தினத்தில் கட்டுவன் பகுதியில் பலாலி முகாம் சிறீலங்கா இராணுவத்தினருடனான நேரடி சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் அன்பு / செல்வராசா மாஸ்ரர்** (சின்னத்துரை செல்வராசா - காங்கேசன் துறை)

**2-ம்லெப். எலிசபெத்** (சிறீரஞ்சனிசிறீஸ்கந்தராசா - உடுத்துறை வடக்கு - தாளையடி)

அல்லைப்பிட்டிப் பகுதியிற் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சாப்சன்** (செல்லப்பா குலேந்திரன் - நாவாந்துறை யாழ்ப்பாணம்)

1992-ம் ஆண்டு யாழ் - மாதகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அருளையன்/பிரதீப்** (சாமித்தம்பி பகிந்தன் - வாழைச்சேனை - மட்டு)

**கப்டன் கணேசன் / கணேஸ்** (புண்ணியமூர்த்தி ரகு - 2ம்படிவம், கந்தளாய் - திருமலை)

**கப்டன் வன்னியன்** (கணபதிப்பிள்ளை சணநாதன் - துணுக்காய் - மாங்குளம்)

**லெப்.தயாபரன் /பார்த்தீபன்** (சிவசுப்பிரமணியம் சிவசொரூபன் - யோசபுரம் - மாங்குளம்)

முன்னாள் யாழ் மாவட்ட தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்தளபதியும். அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிப் பொறுப்பாளருமான,

**லெப் கேணல் ராஜன் / ரோமியோ நவம்பர்** (சோமசுந்தரம் சற்குணம் - மாதகல் மேற்கு - யாழ்)

**2-ம்லெப். இளங்கோ/யோகராஜா** (பாஸ்கரன் பிரபாகரன் - காங்கேசன்துறை - யாழ்

**கலைச்செல்வன் / குகன்** (இருதயநாதன் புனிதராசன் 2ம் குறுக்குத்தெரு -பருத்தித்துறை)

**அறிவழகன்** (நாகலிங்கம் சிவகுமார் - குரும்பசிட்டி - யாழ்)

**மதியழகன்** (நடராசா பூவலிங்கம் - புலோப்பளை -பளை)

1993 ம் ஆண்டு யாழ் - பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலைப் பகுதியில் முன்னேறமுயன்ற சிறீலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப் பொழிலன்** (நாகராசா கணேஸ்வரன் - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

**லெப்.பொறையன்/அல்பேட்** (வேலாயுதம் ரங்கன் - தெல்லிப்பளை)

**2-ம் லெப். மருதவாணன் /உத்தமன்** (இரத்தினசிங்கம் அறிவழகன் - ஏழாலை மேற்கு - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், இலங்கை - இந்தியப் படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

## 500 ஆவது கடன்

மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதி கிளையின் 500 ஆவது சுயமுயற்சி கடன் வழங்கும் வைபவம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும் வங்கி முகாமையாளர் எஸ்.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் யாழ் அரச அதிபர் கா.மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

1994-ல் புதிதாக ஆரம்பித்த வியாபார நிலையங்களும், இதுவரை வியாபார உத்தரவு பெறாத வியாபார நிலையங்களும் எதிர்வரும் 15-09-94-க்கு முன்னர் விண்ணப்பித்து வியாபார உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம். 25 - 08 - 94

(சி-10181)

தாயவள் மீது அன்பு கொண்டது போல்
தாய் நாட்டின் மீதும் அன்பு கொண்டாய்
ஈழத்தாய் விலங்கொடிக்க துணிவு கொண்டு
எதிரியின் பாசறையை தகர்த்து நின்றாய்
கனியாகு முன்னே விதையான காவியமே
பேரோடு புகழ் பெற்ற பெருவாழ்வு போதுமென்றே
கண்ணீரில் எமை ஆழ்த்தி சென்று விட்டாய்
சிரித்த உன் முகம் காண சிந்தை துடிக்குதடா.

இன்று எமது இல்லத்தில் நிகழும் 45-ம் நாள் நினைவில் கலந்து கொள்ளும் வண்ணம் சகபோராளிகள், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

நடராஜா கோட்டம், - குடும்பத்தினர்
வல்வெட்டித்துறை. (9205)

லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி- 10183)

## 4-ம் ஆண்டு நினைவில்.....



### மேஜர் செல்வராஜா மாஸ்ரர் (அன்பு)

(சின்னத்துரை செல்வராஜா)

(கீரிமலை வீதி காங்கேசன்துறை)

பிறப்பு:- 17 - 08 - 1961 வீரச்சாவு:- 27 - 08 - 1990

தாயக விடுதலைத் தாகம் கொண்டாய் தானைத்தலைவனின் வழி நடந்தாய்
தாய்மண் மடியினில் நீ துயின்றாய் செந்தமிழீழம் மலர்ந்திடும் நாளை
வீரனே! உறங்கு கனவுகள் பலிக்கும்.

பருத்தித்துறை. (9203) - குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவுப் பூக்கள்



மழலையாக
1974 - 07 - 01

மாவீரனாக
1993 - 08 - 27

கழிபுரத்தில் நடைபெற்ற விமான எதிர்ப்புத் தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

### 2-ம் லெப். மருதவாணன் (உத்தமன்)

(இரத்தினசிங்கம் அறிவழகன்)

ஓ! பாசமலர் ஒன்று வாடி - இன்று
ஓராண்டு பூர்த்தியடைந்து விட்டதன்றோ.
ஈரிரண்டு இதயங்கள் ஏங்குகின்றன - இனியவனே
உன் நிஜமான வரவுக்காக.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சகபோராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்;

ஏழாலை மேற்கு, இவரது பிரிவால் துயருறும்
ஏழாலை. - குடும்பத்தினர்

(9107)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

### மதியழகன்/நளன்

(நடராசன் பூவலிங்கம்)

பிறப்பு: 15 . 08 . 1976 வீரச்சாவு: 27 . 08 . 1992

- குடும்பத்தினர்

புலோப்பளை கிழக்கு,
பளை. (9216)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்



க- பொ. த. உயர்தரப் பரீட்சை 1994

# அளவையியலும் விஞ்ஞான முறையும்

பரீட்சை வழிகாட்டி தொடர்ச்சி

## பகுதிI இன் பகுதிII




இப்பகுதியில் அனுமானம் தொடர்பானவினாக்களும் வென்வரைபடம் தொடர்பான வினாவும் பொதுவாக இடம்பெறுவதுண்டு. இப்பகுதியில் அமைந்த சில வினாக்களுக்கான விடையளித்தல்முறையை நோக்குவோம்.

வினா 5

இப்பகுதியில் இடம்பெறக்கூடிய சில வினாக்கள்

அ) இரு குறை எடுப்புக்களில் இருந்து ஏன் வலிதான வாதம் பெறமுடியாதென்பதை நியாயத் தொடையின் பிரதான விதிகள் மூலம் விளக்குக.

விடை

இவ்வினாவுக்கான விடையில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறவேண்டும். பின்வரும் விளக்கத்துடன் விடை இருப்பின் 10 புள்ளிகள் வழங்கப்படும்.

★ எடுகூற்றுக்கள் இரண்டும் குறையாக வரும் வாதங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பே. கூற்று | I | O | I | O |
| சி. கூற்று | I | O | O | I |

இவ்விதம் அமைந்த ஒவ்வொரு வாதத்திலும் பிரதான விதி மீறுதல் என்பதை விளக்குதல் உதாரணம் காட்டப்படுதல் சிறந்தது.

★ இங்கு இரண்டும் I எடுப்பாக வரின் வியாப்தி விதி 1 மீறி மத்தியபதப்போலி ஏற்படும்

★ இரண்டும் O எடுப்பாகவரின் பண்புவிதி 1 மீறி இருஎதிர்மறைப் போலி ஏற்படும்

★ முறையே I, O எனவரின் வியாப்திவிதி2 மீறி பெரும்பதப்போலி ஏற்படும்

★ முறையே O, I என வரின் வியாப்திவிதி 1மீறி மத்தியபதப்போலி அல்லது வியாப்திவிதி2மீறி பெரும்பதப் போலி ஏற்படும்.

ஆகவேதான் இங்கு வலிதான வாதம் பெற முடியாது.

(மாணவர்கள் இதேபோன்று ஏனைய கிளைவிதி பற்றிய விளக்கத்தையும் கவனத்தில் கொள்க)

ஆ) பதங்களின் வியாப்தி விதியை (பரவல் விதி அறுதி எடுப்புக்களுடன் தொடர்படுத்தி விளக்குக.

விடை

இவ்வினாவுக்கு பின்வரும் விடயத்துடன் விடை இருப்பின் 10 புள்ளி வழங்கப்படும்.


★ வியாப்தி என்பது பதங்களின் அங்கத்துவங்களைக் குறிப்பதாகும் இங்கு ஒரு பதம் அப்பதம் குறிக்கும் வகுப்பின் முழு அங்கத்துவங்களையும் பிரதிபலிப்பின் அது வியாப்தி உடைய பதம் எனவும் மாறாக ஒரு சில அங்கத்துவங்களை பிரதிபலிப்பின் வியாப்தி அற்ற பதம் எனவும் கூறப்படும்.

★ A,E.I,O என்ற எடுப்புக்களின் வியாப்தி நிலையை விளக்கி பின்வரும் அட்டவணையும் விடையில் இடம் பெற வேண்டும்.

| எடுப்பு | எழுவாய் பதம் | பயனிலை பதம் |
|---|---|---|
| A | வியாப்தி உடையது | வியாப்தி அற்றது |
| E | வியாப்தி உடையது | வியாப்தி உடையது |
| I | வியாப்தி அற்றது | வியாப்தி அற்றது |
| O | வியாப்தி அற்றது | வியாப்தி உடையது |

இ) பின்வரும் வாதங்களை நியாயத் தொடை வடிவில் அமைத்து அவை வலிதானதா அல்

கொண்டிருப்பது ஆகும். ஒருளடுப்பில் எழுவாய், பயனிலைகளில் பொதுப்பதமாக அமைவனயாவும் வென்வரைபடத்தில் வகுப்பாக கொள்ளப்படுகின்றது உ+மாக அரிஸ்ரோட்டில் ஓர் விஞ்ஞானி என்பதில் விஞ்ஞானி என்பது ஓர் வகுப்பாகும் அதில் அரிஸ்ரோட்டில் அங்கத்துவம் ஆகும் இதனை வென்படத்தில் பின் வருமாறு காட்டலாம்.




A மனித வகுப்பு
X அரிஸ்ரோட்டில்

(மாணவர்கள் இதேபோன்று ஏனையவற்றுக்கும் விடையளிக்க பழகிக் கொள்க)

ஆ) பின்வரும் வாக்கியங்களை வகுப்படிப்படையில் குறியீட்டில் அமைக்குக.

உ+ம் (1)

எல்லா மாணவரும் அறிவாளிகள் ஆவர்.

விடை

(ஒவ்வொரு பகுதிக்கும் 01 புள்ளி)

சு. திட்டம்

A - மாணவர் வகுப்பு
B - அறிவாளி வகுப்பு

குறியீடு

$A\overline{B} = O$

இ) பின்வரும் வாதங்களை வகுப்படிப்படையில் குறியீட்டில் அமைத்து வென் வரைபடத்தின் மூலம் அவற்றின் வாய்ப்பினை துணிக.

உ+ம் (1)

சில பறவைகள் கறுப்பு
எல்லா காகங்களும் கறுப்பு
ஆகவே காகங்கள் சில பறவைகள் ஆகும்.

விடை

சுருக்கத் திட்டம்

A பறவைகள் வகுப்பு
B கறுப்பானவை வகுப்பு
C காகங்கள் வகுப்பு


குறியீடு

$AB = O$

$C\overline{B} = O$

$\therefore CB = O$

வென்படம்




ஆகவே வாதம் வலிதற்றது. ஏனெனில் CB=O படத்தில் உறுதியாகக் காட்டப்படவில்லை

(உ+ம்) 2

எல்லா மந்திரிகளும் தோல்வியடைந்தவர் ஆவர்.
ரணில் ஓர் மந்திரி. ஆகவே அவர் தோல்வியடைந்தவர்.

(மாணவர்கள் ஒவ்வொரு உருபில் இருந்துபெறும் வலிதான வாதத்துக்கான விசேட விதியையும் பிரகாரங்களுக்கான உதாரணங்களையும் கவனத்தில் எடுக்க. வலிதான பிரகாரத்துக்குரிய ஞாபகத்துணைச் சொற்கள் இங்கு தரப்படுகின்றன)

1-ம் உருபு

பாபறா - BARDARA
கீலெறென்ற் - CELERENT
டாறியி - DARII
பெரியோ - FERIO

2.ம் உருபு

கேமீஸ்ரெஸ் CAMESTRES
கீசறே CESARE
பெஸ்ரைனொ FESTINO
பறோகொ BAROCO

3-ம் உருபு

டேறாப்ரை DARAPTI
டேரைசி DATISI
டிசமிஸ் DISAMIS
பெலாப்ரன் FELAPTON
பீறைசன் FERISON
போகாடோ BOCARDO

4-ம் உருபு

பிறமான்றிப் BRAMANTIP
கமெனெஸ் CAMENES
டிமறிஸ் DIMARIS
பிசேபொ FEAAPO
பிறெசைசன் FRESISON

ஆ) கலப்பு நிபந்தனை நியாயத்தொடையை விளக்குக இவ்வினாவிற்கு விடை எழுதும் போது கலப்பு நிபந்தனை நியாயத்தொடையின் வலிதான விதிகள் இரண்டு பற்றிய விளக்கம் முதல் இடம் பெறுதல் வேண்டும்

1) முற்கூற்று விதித்து பிற்கூற்று விதித்தல் (உடன்பாட்டாகாரி)

2) பிற்கூற்று மறுத்து முற்கூற்று மறுத்தல் (மறுப்பாகாரி)

இவற்றை பொருத்தமான உதாரணத்துடன் எழுத வேண்டும் அத்துடன் இவை மீறப்படுவதால் ஏற்படும் உடன்பாட்டாகாரிப் போலி மறுப்பாகாரிப் போலி என்பன இடம்பெறவேண்டும்

(மாணவர்கள் உடன்பாட்டாகாரி அல்லது மறுப்பாகாரி தனித்து கேட்கப்படும் போது அதன் பல்வேறு வகைகளை கருத்தில் கொள்க)

வினா 8

அ) எடுப்பு முரண்பாட்டு அனுமானங்களை விளக்குக. இவ்வினாவிற்குரிய விடையில் பின்வருவன இடம்பெற வேண்டும்.

★ எடுப்பு முரண்பாடு பற்றிய விளக்கம்

★ எடுப்பு முரண்பாட்டு அனுமான வகைகளை எடுப்பு முரண் சதுரத்தில் காட்டுதல்

★ ஒவ்வொரு அனுமானத்தையும் உதாரணங்களுடன் விளக்குதல்.

ஆ) வழிப்பெறுகை அனுமானங்களின் பிரதான அனுமானங்களை விளக்குக.

இவ்வினாவுச்கு விடை எழுதும் போது பின்வரும் விடயத்தை கவனிக்க.

★ பிரதான அனுமானங்களை கூறுதல்

1] மறுமாற்றம்
2] எதிர்மாற்றம்
3] எதிர்வைக்கை
4] நேர்மாற்றம்

★ இவை ஒவ்வொன்றையும் உதாரணத்துடன் விளக்க வேண்டும்.

★ வலிதான வாதங்களை முன், பின் நியாயப்படி இரு நியாய மாலையில் இருந்தும் அமைக்க வேண்டும்.

வினா 10

பின்வருவனவற்றுக்கு விளக்க குறிப்பு தருக;

1) அளவையியல் வரலாறு
2) பாரம்பரிய அளவையியல் நவீன அளவையியல்
3) பகுப்பெடுப்பு தொகுப்பெடுப்பு
4) அளவையியலும், மொழியும்
5) சிந்தனை விதிகள்
6) நியாயத் தொடையின் குறைபாடு
7) பதங்களின் தொடர்புகள்
8) அளவையியலுக்கும் ஏனைய துறைக்கும் உள்ள தொடர்பு

(இவை போன்றதான விளக்க குறிப்புகளை அறிந்துகொள்க. விடை எழுதும் முறைக்காக முதலாவது விளக்க குறிப்பை கவனிக்க)

1) அளவையியலின் வரலாறு

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதல் அளவையியல் வளர்ச்சியடையத் தொடங்கியது கீழத்தேச சிந்தனைகளிலும் மேலத்தேச சிந்தனைகளிலும் ஆரம்பம் முதல் வளர்ச்சியடைந்தன. அளவையியல் கிரேக்க சொல்லான லாகோஸ் என்பதில் இருந்து பெறப்பட்டதாக கருதப்படுகிறது.

மேலத்தேச சிந்தனையாளர்களில் பாரம்பரிய அளவையியலின் தந்தையாகிய அரிஸ்ரோட்டில் குறிப்பிடத்தக்கவர் ஆனால் கீழத்தேசத்தில் தனித்து ஒரு தத்துவவாதி இடம் பெறவில்லை இங்கு இந்திய அளவையியல் முறைகள் குறிப்பிடத்தக்கன.

அளவையியலானது உய்த்தறி அளவையியல் தொகுத்தறி அளவையியல் என வளர்ச்சியடைந்து இன்று பேட்டன்றசல், வைற்கெற் போன்ற தத்துவவாதிகளால் குறியீட்டு அளவையியல் வளர்ச்சியடைந்தது குறிப்பிடக் கூடியது.

வினா 11

அ) பின்வரும் போலிகளை உதாரணங்களுடன் விளக்குக.

1] அறியாமை நியாயப் போலி
2] முடிவு மேற் கோடற் போலி
3] காகதாலிய நியாயப் போலி
4] அசித்தப் போலி
5] சமுதாயப் போலி

ஸ்ரீ. சயந்தன் B. A. (Cey)
ஆசிரியர்
யா/ மகாஜனாக் கல்லூரி
தெல்லிப்பழை

(இவை போன்ற அளவையியல் போலிகளை கவனிக்க)

விடை

இவ்வினாக்களுக்கு விடைஎழுதும் போது பின்வரும் விடயம் கருத்தில் கொள்க

★ ஒவ்வொரு போலியின் இயல்பையும் தெளிவாக வரையறுத்து எழுத வேண்டும்

★ அப்போலியுடன் பொருந்திவரக்கூடிய உதாரணங்கள் காட்டப்படவேண்டும்

ஆ) பின்வரும் நியாயங்களில் உள்ள போலிகளை இனம் கண்டு அவற்றின் இயல்பை எழுதுக:

| | | |
|---|---|---|
| | உடையது | உடையது |
| I | வியாப்தி | வியாப்தி |
| | அற்றது | அற்றது |
| O | வியாப்தி | வியாப்தி |
| | அற்றது | உடையது |

இ) பின்வரும் வாதங்களை நியாயத் தொடை வடிவில் அமைத்து அவை வலிதானதா அல்லவா என கூறுவதுடன் வலிதற்றது எனின் மீறிய விதிகளையும் போலிகளையும் குறிப்பிடுக.

இவ்வினாவுக்கு விடையளிக்கும் முறையை சில உதாரணம் மூலம் நோக்கலாம்.

1) சில ஆசிரியர் பட்டதாரிகள். அறிவாளிகள் எல்லோரும் ஆசிரியர். ஆகவே பட்டதாரிகள் சிலர் அறிவாளிகள் ஆவர்.

விடை

★ நியாயத்தொடை வடிவம்

**PAM** அறிவாளிகள் எல்லோரும் ஆசிரியர் ஆவர்
**MIS** சில ஆசிரியர் பட்டதாரிகள் ஆவர்
**SIP** ஆகவே பட்டதாரிகள் சிலர் அறிவாளிகள் ஆவர்.

இங்கு

**S** - பட்டதாரிகள்
**P** - அறிவாளிகள்
**M**- ஆசிரியர்

இவ்நியாயத் தொடை வலிதற்றது

ஏனெனில் இங்கு வியாப்தி விதி 1 மீறி மத்தியப் பதப் போலி ஏற்பட்டது. அதாவது இவ்வாதத்தில் ஆசிரியர் என்ற மத்தியப் பதம் எடுகூற்று இரண்டிலும் வியாப்தி அடையாததால் வியாப்தி விதி 1 மீறியுள்ளது.

2) எல்லாஅரசியல்வாதிகள் சட்டத்தரணிகள்அல்ல. ஏனெனில் வேட்பாளர் எல்லோரும் அரசியல்வாதிகளும் சில வேட்பாளர் சட்டத்தரணி அல்லாதவர்களும் ஆவர்.

விடை

★ நியாயத் தொடை வடிவம்

**MOP** சில வேட்பாளர் சட்டத்தரணிகள் அல்ல
**MAS** வேட்பாளர் எல்லோரும் அரசியல்வாதிகள் ஆவர்.
**SOP** ஆகவே சில அரசியல்வாதிகள் சட்டத்தரணிகள் அல்ல.

இங்கு

**S** - அரசியல்வாதிகள்
**P** - சட்டத்தரணிகள்
**M** - வேட்பாளர்

இவ் நியாயத்தொடை வலிதானதாகும்

ஏனெனில் பிரதான நியாயத் தொடை விதிகள் 6 ஐயும் பின்பற்றி உள்ளது.

(மாணவர்கள் இத்தகைய வினாக்களில் வரும் நியாயத் தொடைக்குரிய உருபு, பிரகாரம் என்பவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.)

வினா 6

அ) பின்வருவன பற்றி வென் வரைபடத்துடன் தொடர்புபடுத்தி விளக்கக் குறிப்பு தருக.

1) வகுப்பு (தொடை) (2) வெற்றுவகுப்பு
3) வகுப்புப்பெருக்கம் (4) உரையாடல் உலகு

விடையளிக்கும் முறை

(ஒவ்வொரு பகுதிக்கும் 5 புள்ளி)

1) வகுப்பு என்பது யாதேனும் மூலஅம்சம் குறிப்பிடப்பட்டு அதற்குரிய ஒரு அங்கத்துவத்தையாவது



ஆகவே வாதம் வலிதற்றது. ஏனெனில் **CB=O** படத்தில் உறுதியாகக் காட்டப்படவில்லை

(உ+ம்) 2

எல்லா மந்திரிகளும் தோல்வியடைந்தவர் ஆவர்.
ரணில் ஓர் மந்திரி. ஆகவே அவர் தோல்வியடைந்தவர்.


விடை

சுருக்கத் திட்டம்

**A** மந்திரிகள் வகுப்பு
**B** தோல்வியடைந்தவர் வகுப்பு
**X** ரணில்

குறியீடு — வென்படம்

$A\bar{B}=O$
$X \in A$
$\therefore X \in B$




ஆகவே வாதம் வலிதானது, ஏனெனில் $X \in B$ படத்தில் உறுதியாக உள்ளது.

★ புள்ளியிடலில் சுருக்கத் திட்டம் குறியீடு, படம், முடிவு என்பதை கருத்தில் கொள்ளப்படும். குறியீடு பிழை எனின் புள்ளி எதுவும் இல்லை.

(மாணவர்கள் இவற்றுக்கு மாறாக குறியீட்டாக்கமும், சுருக்கத் திட்டமும் தரப்பட்டிருக்கும்போது அவற்றை வாதங்களாக அமைத்து வென்படத்தில் வாய்ப்புப் பார்க்கும் விடயத்தையும் கவனத்தில் கொள்க.)

வினா 7

அ) நியாயத் தொடையின் உருபும் பிரகாரமும் எனக் கூறப்படுமாற்றை விளக்குக.

விடை

★ நியாயத் தொடையின் உருபு மத்தியபதம் எடுகூற்றுக்களில் இயங்கும் வடிவத்தைக்கொண்டு பெறப்பட்டன. இவை 4 உருபுகள் ஆகும் அவை

| 1-ம் உருபு | 2-ம் உருபு | 3-ம் உருபு | 4-ம்உருபு |
|---|---|---|---|
| MP | PM | MP | PM |
| SM | SM | MS | MS |
| SP | SP | SP | SP |

★ பிரகாரம் என்பது 4 உருபுகளையும் **A, E, I, O** என்ற எடுப்புக்களையும் கொண்டு பெறக்கூடிய வாதங்கள் ஆகும். இங்கு 256 வகையான வாதம் பெறப்படினும் அதில் 19 வகையானதே வலிதான பிரகாரம் ஆகும். அவை 1-ம் உருபில் 4-ம் 2-ம் உருபில் 4-ம் 3-ம் உருபில் 6-ம் 4-ம் உருபில் 5-ம் ஆக அமையும். அவை

| 1-ம் உருபில் | 2-ம் உருபில் |
|---|---|
| AEAE | AEEA |
| AAII | EAIO |
| AEIO | EEOO |

| 3-ம் உருபில் | 4-ம் உருபில் |
|---|---|
| AAIEEO | AAIEE |
| AIAAIA | AEAAI |
| IIIOOO | IEIOO |

இவ்வினாவுச்கு விடை எழுதும் போது பின்வரும் விடயத்தை கவனிக்க.

★ பிரதான அனுமானங்களை கூறுதல்

1] மறுமாற்றம்
2] எதிர்மாற்றம்
3] எதிர்வைக்கை
4] நேர்மாற்றம்

★ இவை ஒவ்வொன்றையும் உதாரணத்துடன் விளக்குதல்.

(மாணவர்கள் மறுமாற்றம், எதிர்மாற்றம் என்பவற்றின் விதிகளையும் கவனிக்குக)

இ பின்வரும் வாதங்கள் வலிதானதா அல்லவா என வழிப்பெறுகை அனுமானம் மூலம் துணிக.

உ+ம் (1) எல்லா மனிதரும் உணவு உண்பர் ஆகவே உணவு உண்பன யாவும் மனிதர்

விடை

இவ்வாதம் வலிதற்றது

ஏனெனில் இங்கு எதிர்மாற்ற விதி மீறி எதிர்மாற்றப் போலி ஏற்பட்டது.

உ+ம் (2) எல்லாமனிதரும் வாக்களிக்க முடியும் ஆகவே வாக்களிக்க முடியாத எவரும் மனிதர் அல்ல

விடை

இவ்வாதம் வலிதானது

இங்கு எதிர்வைக்கை அனுமானப்படி முடிவு பெறப்பட்டது.

## பகுதிI இன் பகுதி III

வினா 9

அ) குறை நியாயத் தொடையை விளக்கி அவற்றில் இருந்து பெறப்படும் வலிதான வாதங்களை தருக.

விடை

★ குறை நியாயத் தொடை என்பது நியாயத் தொடையின் மூன்று கூற்றுக்களில் ஏதாவது ஒன்று நீக்கப்பட்டு வருவதாகும் இவை மூன்று வகை

1] பேரெடுகூற்று நீக்கப்பட்ட நியாயத்தொடை
2] சிற்றெடு கூற்று நீக்கப்பட்ட நியாயத் தொடை
3] முடிவு கூற்று நீக்கப்பட்ட நியாயத்தொடை

★ இவ் நியாயத் தொடையை உதாரணத்துடன் விளக்க வேண்டும்.

★ குறை நியாயத் தொடையில் நீக்கப்பட்ட கூற்றை பிரதான விதிகளுக்கு அமைய சேர்ப்பதால் வலிதான வாதம் பெறலாம்.

[மூன்றில் இருந்தும் வலிதான வாதம் காட்ட வேண்டும்.)

ஆ) நியாய மாலையை கூறி. அவற்றில் இருந்து முன், பின் நியாயங்கள் படி பெறப்படும் வலிதான வாதங்களை தருக.

விடை

★ நியாயமாலை என்பது ஒழுங்காக அதிகரித்துச் செல்கின்ற ஏதாவது இரண்டுக்கு மேற்பட்ட தரவுகளில் இருந்து முடிவைப் பெறுவதாகும்,

★ இதில் இருவகை உள்ளது.

1] அரிஸ்ரோட்டிலின் நியாயமாலை
2] கொக்லீனியன் நியாய மாலை

★ இருவரது நியாய மாலையையும் உதாரணத்

★ ஒவ்வொரு போலியின் இயல்பையும் தெளிவாக வரையறுத்து எழுத வேண்டும்

★ அப்போலியுடன் பொருந்திவரக்கூடிய உதாரணங்கள் காட்டப்படவேண்டும்

ஆ) பின்வரும் நியாயங்களில் உள்ள போலிகளை இனம் கண்டு அவற்றின் இயல்பை எழுதுக.

உ+ம் (1) தாகூர் தனது சொந்தப் பணத்தில்தனது வீட்டை நிர்வகித்து வந்தார் ஆகவே அவர் தனது சொந்தப் பணத்தில் தனது நாட்டை நிர்வகிப்பார்.

விடை

இவ்நியாயத்தில் அசித்தப்போலி ஏற்பட்டது. அசித்தப்போலி என்பது தரவுகளில் இருந்து தர்க்க ரீதியாக முடிவு பெறப்படாததன் விளைவாக ஏற்படுவதாகும் இங்கு தனது சொந்தப்பணத்தில் வீட்டை நிர்வகிப்பதில் இருந்து சொந்தப் பணத்தில் நாட்டை நிர்வகிப்பார் என பெறப்படும் முடிவு தொடர்பற்ற நியாயம் ஆகும்

உ+ம்

அமெரிக்க ஜனாதிபதியால் இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்க்க முடியும் ஆகவே அமெரிக்க மந்திரிசபையால் இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்க்க முடியும்

விடை

இவ் நியாயத்தில் சமுதாயப் போலி [அமைப்பு போலி] ஏற்பட்டது

சமுதாயப்போலி என்பது தனியனுக்குஅல்லது பகுதிக்கு பொருந்தும் பண்பினை அவ்வகுப்பு முழுமைக்கும் பொருந்தும் எனக் கூறுவதால் ஏற்படுவதாகும் இங்கு சந்திரிகாவுக்கு கூறிய தனிப்பண்பை இலங்கை மந்திரிசபைக்கு பொருந்தும் என கூறியதால் இப் போலி ஏற்பட்டது

வினா 12

இப்பிரிவில் பொதுவாக இந்திய அளவையியல் இடம் பெறுவது உண்டு இவ்வினா தெரிவு செய்யும் மாணவர்கள் பின்வருவனவற்றை அறிந்து கொள்க.

★ அரிஸ்ரோட்டில் அளவையியலுக்கும் இந்திய அளவையியலுக்கும் உள்ள தொடர்பு
★ இந்திய அனுமான முறை
★ இந்திய அனுமான முறைகளின் விளக்க குறிப்பு
★ இந்திய அளவையியல் போலிகள்

குறிப்பு:- அளவையியல் பகுதி I இல் இதுவரை காட்டியவாறு பல்வேறு வினாக்கள் இடம்பெறுவது உண்டு. ஆகவே மாணவர்கள் தரப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய ஐந்து வினாக்களை நன்கு தெரிவு செய்து விடையளிக்கலாம்.

(அளவையியல் பகுதி 11 பற்றிய வழிகாட்டி தொடரும்)

# நெஞ்சினின்றும் நீங்காத நினைவுப் பூக்கள்

## 100-ம் மாதம்



கடற்புலி

### 2-ம் லெப். தெய்வா

(ஐயாத்துரை சிவநாதன்)

(மாதகல்)

பிறப்பு 18- 10- 1964


வீரச்சாவு 27- 04- 1986

தாயினும் மேலான தாயகம் காத்திட
தலைவன் பிரபா வழியில் இணைந்திட்ட தெய்வா!

தாயகத்திற்கும் தமிழகத்திற்கும் கடல் கடந்து
கனரக ஆயுதங்கள் கொண்டு வந்தீரே!

பொலிகைக் கடலதனில் உங்கள் படகை
வழிமறித்ததே சுப்பர் டோரா அன்று!

## 2ஆம் ஆண்டு



முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியும்,
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின்
சிறப்புத் தளபதியும், அதிகாரிகள் பயிற்சிக்
கல்லூரி பொறுப்பாளருமான

லெப்டினன்ட் கேணல்

### ராஜன்

(சோமசுந்தரம் சற்குணம்)

மாதகல்

பிறப்பு 14-02-1966

வீரச்சாவு 27-08-1992

தாயின் மடியிற் பிறந்த போது சற்குணம் நீர்
தலைவன் படையில் இணைந்து வீரவேங்கை

## 26-ம் நாள்



மேஜர்

### சேரன் | அசோக்

(குணசிங்கம் குணராஜ் (சதன்) )

வீரமாணிக்கதேவன்துறை - மயிலிட்டி

பிறப்பு 30-07-1975

வீரச்சாவு 02-08-1994

மயிலையூர் வீரமாணிக்க தேவன் துறைதனில்
விளைந்த வீரப்புலி மேஜர் சேரனே

அடிக்கடி எங்கள் மண் அந்நியனால் சிதைக்கப்படுவதை
கண்டு கொதித்தெழுந்த வீரவேங்கையே!

பகைவனின் படைத்தளத்தினுள் புகுந்து பறவை

பொலிகைக கடலதனில் உங்கள் படகை
வழிமறித்ததே சுப்பர் டோரா அன்று!

எதிரியின் குகையாம் காங்கேசன்துறை தனிலே
கட்டளைக் கப்பலையும் சேர்த்தழித்ததே
எங்கள் படையணி இன்று!



தாயின் மடியிற் பிறந்த போது சற்குணம் நீர்
தலைவன் படையில் இணைந்து வீரவேங்கை
ராஜன் ஆனீர்!

தளபதிராஜன் என்ற பெயர் கேட்டே
தமிழீழத்தின்
எதிரிப்படைகள் கதிகலங்கியதை தரணியதில்
மறந்திடலாமோ!

தலைவன் பிரபா உருவாக்கிய தங்கத்
தளபதியே
தமிழீழ மக்களின் மனதினில்
நிறைந்திட்டவனே!

பிறந்த மண்ணிலே விதையாக
வீழ்ந்திட்டவனே
மீண்டும் எம் மண்ணிலிருந்தே முளையாக
எழுந்து வா!

பகைவனின் படைத்தளத்தினுள் புகுந்து பறவை
நாகத்தின் சரித்திரம் முடித்திட்ட படையணிக்கு
வழிகாட்டியவனே!

விமான ஓடுபாதையில் உங்கள் உடலை வித்தாக்கினீரே
பாரெங்கும் எம் தலைவனின் போர் நெறியை எடுத்துரைத்தீரே!



**எதிரிப்படையின் ஆணிவேரை நன்கறிந்தவன் - போரைக்கண்டு ஒருபோதும் அஞ்சமாட்டான்**

- தளபதி ராஜன் -

**தாயகத்தின் விடுதலைக்காக வீரசுவர்க்கம் அடைந்த வித்துக்களே**

**மலரும் சுதந்திர தமிழீழத்தை பாதுகாத்திடவே மீண்டும் மீண்டும் எழுந்திடுவீர்.**

**27. 08. 94** இன்று லெப் கேணல் ராஜன்
இல்லத்தில் (சரா வீதி, கல்வியங்காடு)
நடைபெறும் நினைவு நிகழ்வில் சகபோராளிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

லெப்.கேணல் சரா வீதி,
கல்வியங்காடு.
27. 08. 1994

(9208)

குடும்பத்தவர்களும்,
உறவினர்களும்,
நண்பர்களும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

நம் சமாதானம் வெற்றி பெற்றவர்கள் சமாதானமாக இருக்க வேண்டும்.

- பொடினான்ட்ஃ பாக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 27 03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் 05

# நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை

இனப்பிரச்சினை தீர்விற்கென நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தயாராக இருப்பதாக மீண்டும் ஒரு முறை விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இது பற்றிப் பேசிய விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஈழத்தமிழரின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த சந்திரிகா அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இதனை எமது இயக்கமும் மனப்பூர்வமாக வரவேற்கின்றது. புதிய அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இருக்கின்றோம்' எனத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடானது புதியதல்ல. கடந்தஇரண்டு வருட காலமாக விடுதலைப் புலிகள் இயக்கம் இதனைத் தெளிவாகவே வலியுறுத்தி வந்துள்ளது. இதனையும் பத்திரிகையாளர் சந்திப்பில் திரு. அன்ரன் பாலசிங்கமும் வலியுறுத்தியிருந்தார். ஆனால் இதனை அன்றைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. பேச்சுவார்த்தைக்கு ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளையே விதித்து வந்தது. இந் நிபந்தனைகள் தவிர்க்க முடியாது யுத்தத்தை தொடரவே வழிவகுத்திருந்தது.

ஆனால், தற்பொழுது புதிதாகப் பதவி ஏற்றுள்ள சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் நிபந்தனைகள் அற்ற பேச்சிற்கு தயார் என்று தெரிவித்துள்ளதோடு விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அறிய அக்கறை கொண்டுள்ளதாகவும் கூறியது. இந்நிலையிலேயே விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக ஒரு முறை தெரிவித்துள்ளதெனலாம்.

இதேசமயம் விடுதலைப்புலிகள் இயக்கம் இனப்பிரச்சினைகளை அரசியற் தீர்வு நோக்கி முன்னேறிச் செல்வதற்கான அடிப்படை ஆலோசனைகள் சிலவற்றையும் கூறியுள்ளது. யுத்தநிறுத்தம்- பொருளாதாரத் தடை நீக்கம்- போக்குவரத்து வழிகளைத் திறந்து விடுதல்- போன்ற அம்சங்களுடன் மேலும் சில மக்களின் அத்தியாவசிய தேவைகளையும் புதிய அரசாங்கம் நிறைவு செய்வது விரும்பத்தக்கது / வரவேற்கத்தக்கது

முன்பக்கத் தொடர்ச்சி

# வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி திட்டத்தை பரிசீலிப்போம்

வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சித் திட்டத்தை நாம் பரிசீலனை செய்வோம். அவ்வாறு ஒரு திட்டம் தந்தால் நாம் பரிசீலனை செய்யத் தயாராகவுள்ளோம்.

ஆரம்ப பேச்சுவார்த்தைகளின்போது, மக்களின் நல்லெண்ணத்தைப் பெற அரசு செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றி வலியுறுத்துவோம். இது பேச்சுவார்த்தையை முன்னோக்கி நகர்த்த உதவும்.

சுமுகமான சூழ்நிலையில் பேச்சுக்கள் தொடர இது உதவும், இந்தநிலையில், அரசு தனது நிலைப்பாட்டை தெரிவிக்கலாம். நாங்களும் எமது நிலைப்பாட்டை தெரிவிப்போம். அரசு தீர்வுத்திட்டம் எதையும் முன்வைத்தால் நாம் பரிசீலனை செய்வோம்.

# யுத்தநிறுத்தத்தின் மூலமே தாக்குதல்களை நிறுத்த முடியும்

இன்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடற்படை தாக்குதல் நடத்துகின்றது. யுத்தநிறுத்தம் இல்லாத பட்சத்தில் இப்படியான தாக்குதல்கள் நடைபெறும் என திரு. அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, பாரியதாக்குதல்களில்இராணுவம்இறங்காது எனக் கூறினால் நாங்களும் பாரிய தாக்குதலைச் செய்யமாட்டோம். ஆனால் சிறிய நடவடிக்கைகள் இருபுறமும் நடைபெறும்.

இதை நீக்க போர்நிறுத்தமொன்றை இரு தரப்பும் செய்ய வேண்டுமே ஒழிய இவர் பாரிய தாக்குதல் நடக்க மாட்டாது எனக் கூறினாரென்பதற்காக நாங்கள் அரசனை நம்பி புருசனை கைவிடமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பாரிய தாக்குதல் எதுவும் இப்போதைக்கு நடைபெறாது என அறிவித்திருப்பது பற்றி கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கொழும்பில் எமது பாதுகாப்பை சந்திரிகாவால்உறுதிப்படுத்தமுடியாது

சிறிலங்காவில் இன்று இரண்டு அரசாங்கங்கள் உள்ளன. பாதுகாப்பு, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடமேயுள்ளது. இதனால் நாம் கொழும்பு சென்று பேச்சுவார்த்தையிலீடுபடுவதனால் சந்திரிகா அரசு எமது உயிருக்கு உத்தரவாதம் தரமுடியாது.

ஆனால்அவர்கள் யாழ்ப்பாணம் வந்து பேச்சுவார்த்தையிலீடுபடுவதானால் அவர்களது உயிர்களுக்குரிய முழுப் பாதுகாப்பையும் விடுதலைப் புலிகளால் வழங்க முடியும். அதற்கான உத்தரவாதத்தையும் நாம் வழங்குகிறோம்

பேச்சு வார்த்தைகளை நடத்த கொழும்பு வருமாறு அழைத்தால் அங்கு சென்று சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவீர்களா? எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு விளக்கமளித்தார்.

# சந்திரிகா யாழ். வந்தால் பிரபாகரனை சந்தித்துப் பேசலாம்

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பேச்சுக்களை நடத்த சந்திரிகா குமாரணதுங்க யாழ்ப்பாணம் வருவாராயின் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகச் சந்தித்துப் பேச்சுகள்நடத்தலாம்

பிரதமர் சந்திரிகா யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேசப்போவதாக அறிவித்துள்ளாரே, அப்படி வந்தால் தலைவர் பிரபாகரன் சந்திப்பாரா? என பத்திரிகையாளர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், அரசு ஏதாவது புதிய தீர்வுத் திட்டத்தை தயாரித்து வைத்திருக்கலாம். சில காரணங்களுக்காக அதை வெளியிடாது இருக்கலாம், நேரடியாகப் பேசும்போது அவர்கள் தமது திட்டத்தை முன்வைத்தால் நாம் அதனைப் பரிசீலனைசெய்வோம். என்றார்.

# பூநகரிப் பாதை திறந்தால் நல்லதொரு சமிக்ஞையாக இருக்கும்

# யுத்தக் கைதிகளைவிடுவிக்க நாம் தயாராகவேஉள்ளோம்

## கைதிகள் இருதரத்தில் உள்ளனர்

சிறிலங்காவின் யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய புலிகள் தயாராகவேயுள்ளனர் என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் விடுதலைப்புலிகளால் கைது செய்து வைக்கப்பட்டிருக்கும் யுத்தக்கைதிகளை விடுதலை செய்வீர்களா என நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் எம்மிடம் இரண்டு தரத்தில் யுத்தக் கைதிகள் உள்ளனர். இதில் பொலிசாரை விடுவிப்பதற்கு நாம் முன்னர் விதித்த நிபந்தனைகளையே மீண்டும் வலியுறுத்துகிறோம் அதாவது சிறிலங்கா அரசானது பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்கினால் நாம் அவர்களை விடுதலை செய்வோம்.

இரண்டாவதாக சில இராணுவத்தினரும் எம்மால் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களை கைதிகள் பரிமாற்றத்தின் மூலமே நாம் விடுதலை செய்வோம் எமது போராளிகள் சிலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் அவர்களை சிறிலங்கா அரசு விடுவிக்குமானால் நாமும் அவர்களுடைய இராணுவத்தினரை விடுதலை செய்ய தயாராக இருக்கிறோம் என்றார்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

## நிபந்தனை

கையின் அடிப்படையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளுக்குநாம்நிபந்தனைகள்எதையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுக்கள்நல்லெண்ணத்தின் அடிப்படையில், பரஸ்பர நம்பிக்கையினடிப்படையில், ஆக்கபூர்வமான முறையில் நடைபெறுவதாயின் ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்படுவது நல்லது.

## போர் நிறுத்தத்திற்கு புலிகள் தயார்

ஏனெனில் ஒரு சமாதான சூழலில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவதுதான் உகந்தது இதற்குபோர்நிறுத்தம் அவசியம் எனவே போர்நிறுத்தம் செய்து ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு முயற்சி எடுப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. கடந்த நான்காண்டுகளாக இந்தப் பொருளாதாரத்தடை காரணமாக எமது மக்கள் தாங்கொணா துன்பத்திற்கு ஆளாகி வருகிறார்கள். இது மக்களின் அன்றாட வாழ்வை பாரியளவில் பாதித்து வருகின்றது இந்தத் தடையை ஐ. தே. க அரசங்கம் எமது மக்கள் மீது திணித்தது.

## பொருளாதாரத் தடை நீக்கத்தை வரவேற்போம்

இந்தப் பொருளாதாரத்

## அரசிற்கு முட்டுக்கட்டை எழலாம்

இப்படியான காரியங்களை செய்ய முனையும் போது புதிய அரசாங்கத்திற்கு முட்டுக் கட்டைகளும் எழலாம். இது ஒரு முழுமையான ஆட்சியதிகாரங்கள் அற்ற அரசு என்பதை நாம் அறிவோம். பாதுகாப்பு விவகாரங்கள், படைத்துறை சம்பந்தமான அதிகாரங்கள் ஜனாதிபதி விஜேதுங்காவின் கையில் இருக்கின்றன. எனவே, ஜனாதிபதி விரும்பினால் முட்டுக்கட்டைகளைப் போடலாம். ஆனால், சமாதானம், போர் நிறுத்தம், சகஜ நிலையைத் தோற்றுவிப்பது என்பன சகல மக்களதும் ஏகோபித்த அபிலாசையாக இருக்கிறது. இந்த வெகுஜன அபிலாசைக்கு எதிராக ஜனாதிபதி முட்டுக் கட்டை போட விரும்பினால், அது அவரது துரிதமான வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றே நாம் கருதுகிறோம்.

போரும், பொருளாதாரத் தடையும், போக்குவரத்து தடையும் எமது மக்களுக்கு எதிராக திணிக்கப்பட்ட அநீதிகள் இந்த நடவடிக்கைகள் அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ அரசாங்கத்துக்கு எவ்விதமான அனுகூலத்தையும் பெற்றுக் கொடுக்கவில்லை பதிலாக, தமிழ் மக்களின் வெறுப்பைத்தான் தேடிக் கொடுத்தது.

அத்தோடு இந்த நடவடிக்கைகள் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. பெரும் உயிரழிவுக்கும். பொருளழிவுக்கும். துன்பத்திற்கும்

யும் கூறியுள்ளது. யுத்தநிறுத்தம்- பொருளாதாரத் தடை நீக்கம்- போக்குவரத்து வழிகளைத் திறந்து விடுதல்- போன்ற அம்சங்களுடன் மேலும் சில மக்களின் அத்தியாவசிய தேவைகளையும் புதிய அரசாங்கம் நிறைவு செய்வது விரும்பத்தக்கது / வரவேற்கத்தக்கது எனக் கூறியுள்ளது.

ஆனால் இவற்றை விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளாகக் கொள்ள வில்லை என்பதைத் தெளிவாகவே தெரிகின்றது. கடந்த காலங்களிலும் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் யுத்த நிறுத்தமும், பொருளாதாரத் தடையும் நீக்கப்பட்டு ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படின் அது பேச்சுவார்த்தைகள் நடைபெற ஒரு சுமுகமான நிலை தோன்றும் எனப்புலிகள் கூறியவை பேச்சுவார்த்தைக்கு புலிகள் நிபந்தனை விதிக்கின்றார்கள் என்றே சிறிலங்கா அரசாங்கத்தால் பிரசாரப் படுத்தப்பட்டது. புலிகளே சமாதானத்திற்கு விரோதமாக செயற்படுவதாகவும் காரணம் கற்பிக்க அது முற்பட்டது.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானத்திற்கான ஒரு சுமுகமான சூழ்நிலை ஒன்று உருவாகாதே சமாதானத்தை நோக்கி முன்னேற முடியும் எனத் தெளிவாக நம்புவது யதார்த்தத்தின் பாற்பட்டதே ஆனால் இன்று இதனை அவர்கள் கோராதுவிட்டாலும் அவற்றின் தேவையை அவர்கள் புதிய அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றே கொள்ள முடியும்.

இதேசமயம் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ள சமாதானத்திற்கான தேவைகளின் அவசியத்தை புதிய அரசாங்கமும் ஓரளவு விளங்கிக் கொண்டிருப்பதாகவே ஊகிக்க முடிகின்றது. பொருளாதாரத் தடை நீக்குவது தொடர்பான அதிகாரிகள் மட்டத்திலான ஆலோசனைகளும், யுத்தம் நிறுத்தம் தொடர்பான பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் பேச்சும், இதனை வெளிப்படுத்துபவையாகவே இருப்பதாகக் கூறலாம்.

ஆயினும் விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினை தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளியிட்டதன் மூலம் அரசாங்கத் தரப்பினர் எழுப்பிய/ எதிர்பார்த்த கேள்விகள் யாவற்றிற்கும் பதில் அளித்துவிட்டனர். இந்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நடவடிக்கைகளை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பே ஆகும்-. இதைவிடுத்து கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கங்கள் செய்ய நினைத்தது போன்று பந்தைப் புலிகள் பக்கம் எறிந்துவிட யோசித்தால் அது இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான தீர்வைக் கொண்டுவர உதவப் போவதில்லை.

# நல்லதொரு சமிக்ஞையாக இருக்கும்

சிறிலங்காவின் புதிய அரசானது பூநகரிப் பாதையைத் திறந்து மக்கள் போக்குவரத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்குமேயானால் அதனைநாம் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சிறந்த சமாதான சமிக்ஞையாக ஏற்றுக் கொள்வோம்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் தமிழ் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில், எமது தமிழ் மக்கள் கடந்த நான்கு வருடங்களாக தொடர்ந்து அமுலில் இருக்கும் பொருளாதாரத் தடைகளாலும் போக்குவரத்துப் பிரச்சினையாலும் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் இவற்றைத் தீர்த்து வைக்க புதிய அரசு நடவடிக்கை எடுக்குமாயின் விடுதலைப் புலிகள் அவற்றைவரவேற்பர். பொருளாதாரத் தடையை நீக்க முயற்சிப்பதாக அரசு அறிக்கைகளில்விடுத்துள்ளது. ஆதேபோல் இப்போக்குவரத்துப் பிரச்சினையையும் தீர்த்து எமது மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்ய பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை விலக்கி அப்பாதையை மக்கள் நடமாட்டத்திற்குத் திறந்துவிடவேண்டும்அப்படிச்செய்யின் அதனை நாம் சமாதானத்திற்கான நல்ல சைகையாகக் கருதுவோம். ஆனையிறவைத் திறக்க அரசு விரும்பாது. அவ்வாறுவிரும்பி இராணுவத்தை வாபஸ் பெற்றால் நாம் வரவேற்போம். அவ்வாறு இல்லாது ஆனையிறவால் மக்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்குமாயின்இராணுவம்மக்களைசோதனையிடக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

## வரவேற்போம்

இந்தப் பொருளாதாரத் தடை நீக்கப்படுமாயின் நாம் அதனைப் பெரிதும் வரவேற்போம்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையாகவே நாம் இதனைக் கருதுவோம்.

## போக்குவரத்து தடையை நீக்குவது சிக்கலானது

பொருளாதாரத் தடையோடு போக்குவரத்துத்தடை பின்னிப் பிணைந்து கிடக்கின்றது. ஆகவே பொருளாதாரத் தடையை நீக்குவதோடு. போக்குவரத்து தடையும் நீக்கப்பட்டால்தான் வடபகுதியில் பொருளாதார நிலைமை சீரடையும். எனவே போக்குவரத்து தடைகளை நீக்குவதற்கும் அரசு முயற்சிகளை எடுத்தால் தமிழ் மக்கள் அதனைப் பெரிதும் வரவேற்பார்கள்.

எமதுமக்கள் தமது சொந்த மண்ணில் தமது பாரம்பரியப் பூமியில் இராணுவ சோதனைகளுக்கு உட்படாதவாறு சுதந்திரமாகப் போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்படவேண்டும் அது அவர்களது அடிப்படை உரிமை இந்த வகையில் பூநகரிப் பாதையை அரசாங்கம் திறந்துவிடலாம். பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற்று அப் பாதையூடாக மக்கள் போக்குவரத்தை அனுமதித்தால் அதனை ஓர் ஆக்கபூர்வமான சமாதான முயற்சியாகவே நாம் கருதுவோம்

தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் சமாதான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் சந்திரிகா குமாரணதுங்கா அரசு சில உருப்படியான காரியங்களை செய்யலாம்.

மேலும் சிக்கலாக்கியது. பெரும் உயிரழிவுக்கும். பொருளழிவுக்கும். துன்பத்திற்கும் துயரத்திற்கும் வழிகோலியது எனவே சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் இந்தப் புதிய அரசாங்கம் உண்மையில் விரும்பினால், இந்த அநீதிகளுக்கு முடிவு கட்ட வேண்டும்.

## பிரச்சினையை இருபரிமாணங்களில் அணுகலாம்

ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை இரண்டு பரிமாணத்தில் அணுகலாம் ஒன்று, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மற்றையது அடிப்படையான பிரச்சினைகள் ஆரம்பகாலப் பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள சம்பந்தமாகவே அமைந்தன அன்றாடப் பிரச்சினைகள் எனும்போது போர் அனர்த்தங்கள், அழிவுகள். சாவுகள் பொருளாதாரப் பிரச்சினைகள், விலைவாசி உயர்வு, வேலையில்லாப் பிரச்சினை, போக்குவரத்துப்பிரச்சினை அகதிகள் பிரச்சினை போன்ற ஏராளமான பிரச்சினைகள் அடங்குகின்றன.

தமிழரின் தாயக கோட்பாடு, தேசியப்பிரச்சினை தன்னாட்சி உரிமைப் பிரச்சினை போன்ற பிரச்சினைகள அடிப்படையான பிரச்சினைகளை குறித்து நிற்கின்றன.

ஆகவே ஆரம்பகால முதற்கட்டமான பேச்சுவார்த்தைகள் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது சம்பந்தமாகவே அமைய வேண்டும் என நாம் விரும்புகின்றோம் அத்தோடு அடிப்படை பிரச்சினைகளைப் பற்றியும் நாம் பேச்சுக்களை நடத்துவோம்.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் மக்களின் அவலங்களைப் பார்க்கும் போது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

# பேச்சுவார்த்தை முஸ்லிம்கள் பிரச்சினையையும் உள்ளடக்கும்

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தைகள், ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளோடு தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாகத்தான் அமையும்.

எனவே தமிழர் தாயகம் எனும் போது தமிழ் பேசும் மக்களது ஒட்டுமொத்தமான தாயகத்தைத்தான் நாம் குறிக்கிறோம். அப்படியான நிலையில் தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம் மக்களின் பிரச்சினையும் அடங்கும்.

இந்த வேளையில், முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் தீர்வில் பங்கேற்பதை நாங்கள் வரவேற்போம் என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில், முஸ்லிம் மக்களது நிலை பற்றி கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

# முஸ்லிம்கள் யாழ். வருவதில் புலிகளுக்கு ஆட்சேபமில்லை

முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து குடியேற விரும்பினால் அதற்கு விடுதலைப்புலிகள் முட்டுக்கட்டையாகஇருக்கமாட்டார்கள் அவர்களை வரவேற்க நாம் தயாராகவேயுள்ளோம்

இன்றைய நிலையில் முஸ்லிம்கள் மட்டும் அகதிகளாக இருக்கவில்லை என்பதை அமைச்சர் அஷ்ரப் தெரிந்து சொல்வது நல்லது. ஏனெனில் இங்கு தற்போது மக்கள் குடியிருப்புகளை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளது. இந்நிலையில் ஒரு பகுதி தமிழ் மக்கள் அகதிகளாகி இங்கு உள்ள முஸ்லிம் மக்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

எனவே இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச்சென்று குடியேறும் வரை முஸ்லிம்கள் இங்குவந்து குடியேறுவதில் சிக்கல்கள் உள்ளன

நாங்கள் வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தை உடனடியாக விலகுமாறு கேட்கவில்லை. அகதிகளான தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதே முக்கியம்

# தேர்தலுக்கு முன் ராணுவச் சதிப்புரட்சி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டதாம்

## சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற தேர்தலுக்கு முன்பாக பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற திடீர் இடமாற்றங்களுக்கும், பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ஹமில்ட்டன் வணசிங்கா, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா ஆகியோரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டமைக்கும் காரணம் இராணுவச் சதிபுரட்சி பற்றிய தகவல்கள் கிடைக்கப்பட்டமையே என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளது.

இராணுவபொலிஸ் கமாண்டர் அசோகா தொரதெனிய, உட்பட பல மூத்த அதிகாரிகள் தலைநகர் கொழும்பிலிருந்து திடீரென இடம் மாற்றம் செய்யப்பட்டது தெரிந்ததே. அசோக தொரதெனிய கொழும்பிலிருந்து வடபகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட சங்கம், வலி கிழக்கு உதைபந்தாட்ட சங்கம் என்பன நடாத்தும் நொக்கவுட் உதை பந்தாட்ட போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யங்ஸ்ரார் எதிர் சிறி அற்புதநர்த்தனை போட்டியும்மாலை 5மணிக்கு தொடர்பாடிஎதிர்கொய்யாத் தோட்ட அணிகளிடையிலான போட்டியும் சென்அன்ரனிஸ் மைதானத்தில் நடைபெறும்.

### பாரிய

செய்திகள் வெளியாகியுள்ளன

இந் நிலையில் நாம் வடக்கு -கிழக்கில் பாரிய இராணுவநடவடிக்கை எதையும் எடுக்கப் போவதில்லை- அவ்வாறு எடுத்தால் அது இந்த நல்ல சமாதான சூழ் நிலைக்கு பாதகமாக மாறிவிடும் எனவும் அவர் தெரிவித்ததாக கொழும்புபத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது-

### பல பலன்களை

பிரச்சினைகளை அணுகுவதால் பிரச்சினைகள் தோன்றாது என அவர் தெரிவித்தார்.

இறந்த படையினரையும், குடும்பத்தினரையும் நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் இலங்கையின் பொருளாதாரம் சீரழிந்துவிட்டது. இதனால் நாடு கண்டுவரும் தாழ்வு நிலையையும் தடுக்க சந்திரிகா குமாரணதுங்க அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் மேலும் முனைப்பாக இருப்பதாகவும் தெரிவித்த அவர், ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசியல் தீர்வை, நடைமுறைப்படுத்த முயலப் போவதாகவும் கூறினார்.

# சேவை நலம் பாராட்டு



திரு. வல்லிபுரம் சபாபதிசோமசுந்தரம் (உப அதிபர்)

அல்வாய் தெற்கைச் சேர்ந்த திரு. வல்லிபுரம் சபாபதிசோமசுந்தரம் (உப அதிபர்) அவர்கள் 27. 08. 94 இல் தனது அறுபதாவது வயதைப் பூர்த்தி செய்து தமது 31 வருட ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவரின் சேவையைப் பாராட்டி.

**யா/ தமபசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இவரது சேவையை பாராட்டுகின்றனர்.**

இவர் நுவரெலியா மாவட்டத்தில் அதிபராக சேவையாற்றி 1977-ம் ஆண்டு கல்விக்கோட்டப் பாடசாலை கல்விச்சபை செயலாளராகவும் இருந்து தோட்டப் பாடசாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்ற பின்னர் அயராது உழைத்தவர். அதன் பின்னர் 1985-ம் ஆண்டு யா/தம்பசிட்டி மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்கு மாற்றலாகி தொடர்ந்து 10 வருட சேவையை திறம்பட ஆற்றியமை குறிப்பிடத்தக்கது,

அன்றிலிருந்து இன்று வரை பருத்தித்துறை தமிழர் ஆசிரியர் சங்க கிளை தலைவராக பணிபுரிந்தார் இக் காலங்களிலே ஆசிரியர்கள் பிரச்சினைகளை கல்வித் திணைக் களத்துடனும் அமைச்சுடனும் தொடர்பு கொண்டு அயராது உழைத்தவர். இவ்வூரார் போற்றும் சமூக சேவையாளனுமாவார். ஆத்மீக வழிகளிலே மாணவர்களை வழிப்படுத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

**"பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய நாம் பல ஆண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்"**

(9217)

# இளம் குடும்பப்பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மேற்கு இறாத்தலடி வயல் கிணற்றில இருந்து இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு தமிழீழ காவல்துறையினரால் விசாரணைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிணற்றினுள் இறந்து கிடந்தவர் சுழிபுரம் மேற்கு இறாத்தலடியைச் சேர்ந்த தேவமனோகரன் வீரவதனி (வயது 20) என தெரியவந்துள்ளது-


இவர் திருமணமாகி நான்கு மாதங்கள்தான் ஆகிறதென வும் மேலும் தெரியவருகிறது

இறந்தவரது கணவர் தெரிவிக்கையில், தனக்கும் மனைவிக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டதெனவும் பின்னர்இரவுஉணவை தனக்குபரிமாறிய பின் உறங்கச் சென்றதாகவும் விடிந்ததும் மனைவியை காணாமல் தேடியதாகவும் தெரிவித்தார்- (சி)

### கப்டன்

திலும், தென்மராட்சியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் வலிகாமத்தில் மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும் இடம்பெறவுள்ளன.

# 2-ம் ஆண்டுநினைவஞ்சலி



மலர்வு: 02 - 11 - 1972

வீரச்சாவு: 21 - 08 - 1992

2-ம் லெப்.இளங்கோ , யோகராசா

(பாஸ்கரன் பிரபாகரன்)

(தையிட்டி, காங்கேசன்துறை)

இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்:

கைதடி கிழக்கு, குடும்பத்தினர்


# ஓட்டோ சேவை இல்லை

முதற் பெண் கடற் கரும்புலியை நினைவு கூரும்நாளை முன்னிட்டு இன்று முச்சக்கர மோட்டார் வண்டிகளின் சேவை நடைபெறமாட்டாது என மு.ச.மோ.வ. சேவை சங்கம் அறிவித்துள்ளது.

# பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# பூநகரி மோதலில் வீரச்சாவடைந்தோர்



மேஜர் சேரன்



கப்டன் குணசீலன் (அன்பரசன்)



லெப். புதியவன்



கப்டன் ஜெயக்காந்தன் (ஜீவகுமார்)

பூநகரிப் பகுதியில் 23- 08- 94 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# அறிவித்தல்

வடபிராந்திய

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்,

## அறிவித்தல்

குப்பிழான் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் தங்கள் கையேடுகளுடன் வங்கிக்கு சமுகம் கொடுத்து தங்கள் கணக்கு மீதிகளை 15-9-94க்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறியத்தருகின்றோம். இதற்குப்பின்னர் தங்கள் கணக்குகளை உறுதிப்படுத்தத்தவறியவர்களின் எந்த வித முறைப்பாடுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

குப்பிழான் கிராமிய வங்கி தற்பொழுது இணுவில் கிராமியவங்கிக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

பொதுமுகாமையாளர்.

26 - 08 - 94

(சி-10187)

---

யாழ். ஸ்ரீதரில்

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும், தினசரி காலை 10-30 மணிக்கு

**' மண்ணுக்காக "**

தினசரி 4.00, 6 00 மணிக்கு

## CIRCUS

ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின் மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும்பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!

சனி, ஞாயிறு தினங்களில் பி ப. 2.00 மணிக்கு மட்டும்

**யூன் - 94 ஒளிவீச்சு** காண்பிக்கப்படும்.

பேராசிரியர் துரைராசா அவர்களைக் கௌரவித்து தமிழீழ தேசியத் தலைவர் விருதுவழங்கும் வைபவமும் பேராசிரியரின் இறுதி ஊர்வலமும் ஒளிவீச்சில் இடம் பெறுகின்றது.

(சி-10173)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## அறிவித்தல்

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம்

27 - 08 - 1994 சனிக்கிழமை, முதற் பெண் கடற் கரும்புலி அங்கயற்கண்ணியால் கப்பலை தகர்த்த வெற்றி நாளை முன்னிட்டு சகல வர்த்தக நிறுவனங்களும் விடுமுறை தினமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

நன்றி

செயலாளர்

(சி-10190)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் 1993/94 கல்வியாண்டின் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் 1994-09-12இல் ஆரம்பமாகவுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாய கற்கை நெறிக்குத் தம்மைப் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் அனைவரும் 1994-09-11 ஆம் திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி-10186)

---

இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்:

கைதடி கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்

(921 4)

---

## கண்ணீர்க் காணிக்கை



### திருமதி மகாலட்சுமி கனகரத்தினம் அவர்களுக்கு....

மறக்கவொணா நினைவுகளில் மிதக்கவைத்து
மறைந்துவிட்ட பெரியவளே! மகாலட்சுமி!!
துறக்கவொணா வே'தனையில் துடிக்கவைத்து
தூங்கிவிட்டாய் சோதரியே என்ன செய்வோம்?

சீவியத்தில் நேசித்தாய், வாழவைத்தாய்.
சிறுவர் எமைவழிகாட்டி உயரவைத்தாய்
ஓவியத்தில் உன் ராஜன் தீட்டிவைக்க
உலகுவிட்டு உம்பரடி போனதேனோ?

கறவிழந்த கன்றுகளாய் கண்ணீர் விட்டோம்
கருணைப் பால் நீ இனிமேல் சுரப்பதெப்போ?
அறிவிருக்கும் வரையினிலே மறவோம் அம்மா
அன்புருவே! பெரியம்மா! சாந்தி கொள் நீ!

கண்ணீர்க் காணிக்கை செய்யும்:

திரு. திருமதி. சி. க. சுப்பிரமணியம்
- குடும்பத்தினர்

15, மகேந்திரா வீதி,
(வைமன் வீதி,)
யாழ்ப்பாணம்.

(9221)

---

பூநகரிப் பகுதியில் 23- 08- 94 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# டோரா வடிவிலான ஊர்தி வீதியில் பவனி

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் ஊடுருவிச்சென்று கடற்படைத் தாய்க் கப்பலையும் அதிவேக டோறா படகையும் தகர்த்து வீரச்சாவடைந்த கப்டன் அங்கயற்கண்ணியின் அர்ப்பணிப்பையும் வீரச் செயலையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவருக்கு வீர அஞ்சலி செலுத்து முகமாகவும் யாழ் நகரப்பகுதி வீதிவழியாக அதிவேக டோறா படகு வடிவிலான ஊர்தி ஒன்று நகர்த்திச் செல்லப்பட்டது.

நீல வர்ண அமைப்பில் அந்தப்படகு வடிவிலான ஊர்தியின் பல பகுதிகளில் மாதிரி கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட நிலையில் ஊர்தி காணப்பட்டது

நேற்று இந்த ஊர்தி பிரதான வீதிகள் வழியாக கொண்டு செல்லப்பட்ட போது வீடுகளுக்கு வெளியே வந்து பல பொதுமக்கள் உணர்ச்சி பொங்கப் பார்த்ததுடன், ஊர்தியின் நடுப்பகுதியில் வைக்கப்பட்டுள்ள கப்டன் அங்கயற்கண்ணியின் படத்திற்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

வீதியின் முன்னே வாகனம் ஒன்றில் எழுச்சி கீதங்கள் இசைக்கப்பட்டுச் செல்ல, இந்த ஊர்தி நகர்த்திச் செல்லப்பட்டது.

---

நரசிம்மராவின்

இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுடன் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பென்சு அரசியல் பிரிவு பணிப்பாளர் ஏ.கே. டேவிட், பிரதமரின் வெளிவிவகார ஆலோசகர் ஏ.சி ராஜபக்ஷ ஆகியோரும் இப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர். எனினும் இப் பேச்சுவார்த்தையின் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்த விபரமும் வெளியிடப்படவில்லை.

---

உத்தியோக

கள் இங்கிருந்து கொழும்பு போகமுடியாது, எங்கள் பிரதிநிதிகளையும் அனுப்பமுடியாது எனத் தெரிவித்தார்.

இலங்கை அரசு யாழ்ப்பாணத்தோடுதான் தொடர்பு கொள்ளவேண்டும். புலிகளின் தலைமை இங்குதான் இருக்கிறது.

வெளிநாட்டிலுள்ள எமது பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்வதில் அர்த்தமில்லை. ஆனால் அரசு எங்களுடன் தொடர்பு கொள்ள நிறைய வாய்ப்புகள் இருக்கின்றது பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தாங்கள் அதிகாரபூர்வமான முறையில் போர்நிறுத்தம் செய்யவிரும்புவதாக எங்களுக்கு அறிவிப்பதற்கு ஏராளமான வழிகள் உண்டு ஆனால் இன்னும் அவர் நேரடியாக முயலவில்லை.

நாங்கள் பத்திரிகைகள் மூலம்தான் எங்கள் நிலைப்பாட்டைச் சொல்லலாம் என திரு. அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.